

வடலூர் தனியார் பள்ளியில் விளையாட்டு பயிற்சியின் போது எதிர்பாராத விதமாக தலையில் ஈட்டி பாய்ந்து உயிரிழந்த மாணவன் கிஷோர் இல்லத்திற்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ,கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாணவன் கிஷோரின் தந்தையார் திருமுருகன் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். உடன் குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வி.சிவகுமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றிய செயலாளர் நாராயணசாமி, கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், கண்ணன், வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவகுமார், வடலூர் நகர கழக செயலாளர் தன.தமிழ்செல்வன், பேரூர் கழக செயலாளர் சங்கர், பேரூர் கழக அவைத் தலைவர் ராமர், நகர மன்ற துணைத் தலைவர் சுப்பராயலு மற்றும் வடலூர் நகர மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




பம்மலில் நடைபெற்ற காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். அருகில் மாவட்ட நிர்வாகிகள் த.துரைசாமி, இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, வெ.விஸ்வநாதன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று தொடங்கி வைக்கிறார்!

# சைதை கிழக்கில் ‘மக்களைத்தேடி மருத்துவம்’ 4 ஆம் ஆண்டு தொடக்க விழா!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. – மேயர் பிரியா – மு.மகேஷ்குமார் – எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு! இரா.துரைராஜ் வேண்டுகோள்!

சென்னை, ஆக. 5 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட, ‘மக்களைத் தேடி மருத்துவம்’ நான்காம் ஆண்டு தொடக்க விழா இன்று சைதை கிழக்குப் பகுதி அருகில் நடைபெறும் நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார். இது குறித்து பகுதிச் செயலாளர் இரா. துரைராஜ் கழகத்தினருக்கு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் ஐந்தாம் நாள் கிருஷ்ணகிரி சாமணப்பள்ளியில் , தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் வெற்றிகரமாக மூன்று ஆண்டுகள் நிறைவு செய்து நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு இன்று 05.08.2024 திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு சைதை கிழக்கு பகுதி அலுவலகம் அருகில் நேரு நகர் நெடுஞ்செழியன் தெருவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மா.சுப்பிரமணியன் தலைமையில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் துணை மேயர் மு.மகேஷ்குமார் 10வது வார்டு குழு தலைவரும் சைதை கிழக்கு பகுதி செயலாளருமான எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

மேலும் நிகழ்ச்சியில் சைதை கிழக்கு பகுதியில் உள்ள மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்கிறார்கள் எனவே நிகழ்ச்சியில் நமது சைதை கிழக்குப் பகுதியில் உள்ள பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் மாவட்ட மற்றும் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் சார்பு மன்ற நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் செயல் வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் பெரும் திரளாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டு சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா. துரைராஜ் எம்.சி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவுநாள்!

# கோவை மாநகர் மாவட்டக் கழகம் சார்பில் அமைதிப் பேரணி!

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் வேண்டுகோள்!



கோவை, ஆக. 5-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டை கோவை மாநகர் மாவட்டக் கழகம் சார்பில் ஆக 7-அன்று அமைதிப் பேரணி நடைபெறுகிறது. இதில் மாநகர் மாவட்டக் கழகத் தோழர்கள் திரளாகக் கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தகைமைசால் தலைவராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராக, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து,அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக த் திகழ்ந்த முத்தமிழறிஞர், செம்மொழிக் காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 6 வது நினைவு நாளையொட்டி,

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், ஆகஸ்ட் 7 அன்று காலை 8.00 மணிக்கு,”அமைதிப் பேரணி” கோவை சித்தாபுதூர், வி.கே.கே.மேனன் சாலை,ஆவாரம்பாளையம் சாலை சந்திப்பில் இருந்து புறப்பட்டு,

காந்திபுரம் அண்ணா சிலை அருகில் உள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. விற்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள்,கோவை நாடாளுமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதிக் கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள்,துணை அமைப்பாளர்கள்,

பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் கழக செயல் வீரர்கள், BLA2 பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும், முத்தமிழறிஞரின் நினைவைப் போற்றி, அஞ்சலி செலுத்த,தவறாமல் திரண்டு வர வேண்டும் என்று, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நா.கார்த்திக் அறிக்கையில் கூறியுள்ளார்.

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி!

### மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், ஆக. 5-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு 07.08.2024 , புதன்கிழமை காலை 8 மணிக்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் , விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகம் தொடங்கி கலைஞர் அறிவாலயம் வரை அமைதிப் பேரணியும், தொடர்ந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தப்படுகிறது.

மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன் , அன்னியூர் அ.சிவா, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன் , தயா.இளந்திரையன் , இரா. கற்பகம் , மாநில மகளிர் பிரச்சாரக் குழு செயலாளர் தேன்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்நினைவேந்தல் நிகழ்ச்சியில் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் , சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாட்டில் கடந்த 2009ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் அருந்ததியினருக்கு 3% உள் இடஒதுக்கீடு சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில் தற்போது ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான சமூக நீதியை நிலைநாட்டும் நமது திராவிட மாடல் அரசின் பயணத்துக்கான மற்றொரு அங்கீகாரமாக இன்றைய 7 நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற அருந்ததியினருக்கு ஓதிக்கீடு செல்லும் என வரலாறு சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியதற்கு முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் ஆதிதிராவிடர் நலக்குழு திமுக சார்பில் நன்றி தெரிவிக்கும் கூட்டம் திருவள்ளூர் மேற்கு மாவட்டம், இரா.கி.பேட்டை மேற்கு ஒன்றியம், அருந்ததியர் காலனி பகுதியில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, முன்னிலையில் மாநில ஆதிதிராவிட நலகுழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ தலைமையில் அருந்ததியினர் மக்கள் நன்றி தெரிவித்தனர் இதனை தொடர்ந்து அவர்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். உடன் சி.என்.சண்முகம். பீடி சந்திரன். ராஜேஸ்வரி ரவீந்திரநாத். திலகவதி ரமேஷ். சிலம்பு பன்னீர்செல்வம், சி.எம் ரவி. சம்பத். அம்பேத், ..சீனிவாசன் , ஜெய்சங்கர், புவனேஸ்வரி வெங்கடேஷ் கணேசன், ராமசாமி, முருகேசன், மோகன், மத்தூர் பன்னீர்செல்வம், அன்பு , உள்பட பலர் உள்ளனர்

### முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவுநாள்!

# சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை



சேலம், ஆக. 5-

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவரது வேண்டுகோள் வருமாறு;

மறைந்தும் மறை யாமல் நம்முடைய நெஞ்சங்களில் நீக்க மற நிறைந்திருக்கும் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு நாளை யொட்டி 7.8.2024 புதன்கிழமை காலை 8 மணியளவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு எனது தலைமையில் வாழப்பாடியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் தளபதி மு. க. ஸ்டாலின் அறிவாலயத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அதுசமயம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 80 ஆண்டு கால பொது வாழ்வு, 60 ஆண்டுகால மக்கள் பிரதிநிதி, 50 ஆண்டுகால கட்சித் தலைமை, 20 ஆண்டுகால முதல்வர், 94 ஆண்டு காலமாக உழைப்பு, இயல் இசை நாடகம் போன்ற ஈடுசெய்ய முடியாத மிக்க தலைவராக திகழ்ந்தவர். ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம் ,சகோதரத்துவம், மதச்சார்பின்மை, உள்ளிட்ட அனைத்து முற்போக்கு லட்சியங்களுக்காகவும் தனது வாழ்நாள் முழுவதும் வாதாடி போராடி ஆட்சியிலிருந்த நேரங்களில் உன்னத நோக்கங்களை நிலைநாட்டிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு பிரிந்தாலும் அவர் மீது கொண்ட கொள்கையாலும் சரித்திர சாதனைகளாளும் கலாச்சார நினைவுகளோடு நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஏழை எளிய பொதுமக்களுக்கும் ஆதரவற்றோர் முதி யோர்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மாவட்ட, நகர ,ஒன்றிய , பேரூர், கழக செயலாளர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், மற்றும் கிளை கழக செயலாளர்கள் ,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள் ,சார்பு அணிகள் செய்திட வேண்டும் அவரவர் பகுதிகளில் வீட்டு முன்பு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### இராணிப்பேட்டை மாவட்ட

# தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி பங்கேற்பு!

இராணிப்பேட்டை, ஆக. 5 -

இராணிப்பேட்டைமாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழா கொண்டாடும் விதமாக மாவட்ட மகளிர் மற்றும் தொண்டர் அணி சார்பில் செயற்குழு கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார்.

மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பவானி வடிவேலு அனைவரையும் வரவேற்று பேசினார்.

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி திருமூர்த்தி முன்னிலை வகித்தார்.

மாநில மகளிரணி இணைச் செயலாளர் குமாரி விஜயகுமார், சிறப்புரை ஆற்றினார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ,மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் பவானி வடிவேலு , மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயந்தி திருமூர்த்தி மாவட்ட துணை செயலாளர் குமுதா குமார் மாவட்ட மகளிர் அணி துணை செயலாளர் பவளக்கொடி சரவணன் தீர்மானங்களை வாசித்தார்.

தீர்மானம் வருமாறு:

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை கொண்டாடும் விதமாக, ராணிப்பேட்டை மாவட்டத்தில் மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் மிக சிறப்பாக வினாடி வினா நிகழ்ச்சி நடத்த தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது .

மாவட்டம் முழுவதும் மகளிர் மற்றும் தொண்டரணி சார்பில் அதிக அளவில் உறுப்பினர்கள் சேர்க்கப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளை மிக சிறப்பாக வெற்றி பெற்றமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள் மற்றும் கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நமது மாவட்ட கழக செயலாளர், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அவர்களுக்கும் மாவட்ட மகளிர்மற்றும் தொண்டர் அணி சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். இளம்பெண்கள் பாசறை கூட்டம் நடத்துவதற்கு இந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் மனோண்மனி, மாவட்ட மகளிர் தொண்டரணி தலைவர் ஜெயஷீலா மற்றும் நகராட்சி தலைவர்கள் சுஜாதா வினோத், ஹரிணி தில்லை ஒன்றிய குழு தலைவர்கள் நிர்மலா சவுந்தர், புவனேஸ்வரி சந்தியானந்தம், பேரூராட்சி மன்றத் தலைவர் சங்கீதா மகேஷ் மற்றும் மாவட்ட துணை செயலாளர் மு.சிவானந்தம் தலைமை செயற்குழு உறுப்பினர் அ.அசோகன் வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட் நகர மன்ற தலைவர் அமீன் பேரூர் செயலாளர் பெரியசாமி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் கள்ஐஸ்வர்யா, அம்பிகாபாபு, சுந்தரம்பாள், ஏ.கவிதா, வி.துளசி, எம். ஆர்.மோகனாம்பாள், ஜெயபாரதி,ஜி.காயத்திரி, மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் என்.கல்பனா, வி.மாலதி, வி.சதிஷ்னி, எஸ்.அனிதா, தேவி, சபரி, ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் நகர மகளிரணி அமைப்பாளர் பரமேஸ்வரி நன்றியுரை கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன். கோவிந்தராஜன்
### ஆகஸ்ட் 5 (2020)



**இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**நீடாமங்கலம் பேரூர்ச் செயலாளர், ஒன்றிய அவைத்தலைவர் என பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளர பாடுபட்டவர்.**

**நீடாமங்கலம் பேரூராட்சித் தலைவர், நீடாமங்கலம் கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**